கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண்.77/2024

வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **இளங்கோவன்** | தொழில் | |
| த/க பெயர் | | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 17.10.2025 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>**முதல் விசாரணை**</u>

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கு எனக்கு எழுதிக்கொடுத்த கடன் பத்திரத்தின் அடிப்படையில் பெற்றுக்கொண்ட கடனை திரும்ப பெறும் வகைக்கு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தை என் முதல் நிலை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன். 10.02.2021 தேதியிட்ட பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்த கடன் பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.1** ஆக குறியிடு செய்யப்படுகிறது. மேற்படி கடனை திரும்ப செலுத்த கோரி 08.01.2024 அன்று எனது வழக்கறிஞர் மூலம் நான் அனுப்பிய அறிவிப்பின் நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.2** ஆக குறியிடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.3** ஆக குறியிடு செய்யப்படுகிறது. கடன் பெற்ற போது அதனை திருப்பி செலுத்து வகைக்கு ஆதரவாக பிரதிவாதி என் வசம் ஒப்படைத்த அதன் பேரிலான கிரைய பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.4** ஆக குறியிடு செய்யப்படுகிறது.

<u>**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u> – வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this

contains a full and true account of the statement Made by the witness.

G SARAN Digitally signed by G SARAN
Date: 2025.10.17 15:39:27
+0530

Additional District and Sessions Judge(FAC),

Dindigul.